செ.வெ.எண்:59 நாள்:22.10.2018

**கரூர் மாவட்டம்**

**அரசு மானியத்தில் நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ள விருப்பமுள்ள விவசாயிகள்/மீன்வளர்ப்போர் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக பின்வரும் திட்டங்களை செயல்படுத்தவுள்ளது.

விவசாயிகள் ஒரு ஹெக்டெர் பரப்பளவில் புதிய மீன்பண்ணைக் குளங்கள் - குட்டைகள் அமைத்திட ஆகும் செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்தில் 40% மானியமாக ரூ.2.80 இலட்சம் வழங்கப்படும். மேலும், இதே போல் ஏற்கனவெ உள்ள மீன்வளர்ப்பு குளங்கள் / தொட்டிகளை சீரமைத்து புதுப்பித்திட ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.3.50 இலட்சத்தில் 40% மானியமாக ரூ.1.40 இலட்சம் வழங்கப்படும்.

மேலும், மேற்கண்ட திட்டங்களின் கீழ் வெட்டப்பட்ட அல்லது புனரமைக்கப்பட்ட மீன்பண்ணைகளுக்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினமாக ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்தில் 40% மானியமாக ரூ.0.60 இலட்சம் வழங்கப்படும்.

பயனாளிகள் முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ள விவசாயிகள் / மீன்வளர்ப்போர் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், 4, காயிதே மில்லத் தெரு, காஜாநகர், மன்னார்புரம், திருச்சி - 621 020, தொலைபேசி எண் 0431-2421173 என்ற முகவரியில் தொடர்பு டிகாண்டு கூடுதல் விபரங்களை பெற்று பயனடையலாம்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**